# DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 56/2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | நிஷாந்த் (மருத்துவர்) (P.w.7) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of May 2026

(1, 2 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. மேற்படி எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.12.2022ம் தேதியன்று பணி மருத்துவராக பணியில் இருந்தபோது இரவு சுமார் 10.15மணியளவில் ஜெயா என்பவரை அவருடைய கணவர் தர்மராஜ் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவர் திருச்சுழி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின் கழுத்து வலியும், தலைவலியும் இருப்பதாக சொன்னதால் மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு வந்தார். அவரை நான்

உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு நுண்கதிர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் எலும்பில் சேதாரம் எதுவும் இல்லாத காரணத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன்.**(ஜெயா என்பவரின் விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. அதே நாள், அதே நேரத்தில் உழுத்திமடையைச் சேர்ந்த 60 வயதுடைய லட்சுமி என்பவரை அவரது மகன் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரும் திருச்சுழி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு தலைவலியும், மயக்கமும் இருப்பதால் மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பெற்றார். அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு நுண்கதிர் பரிசோதனையும், மூளைக்கு சிடிஸ்கேன் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. அதில் சேதாரம் எதுவும் இல்லாத காரணத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன்.**(லட்சுமி என்பவரின் விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்

**எ.த.கு.வி –**

ஜெயா, லட்சுமி ஆகியோர்கள் சுயநினைவுடன்தான் மருத்துவமனைக்கு வந்தார்களா என்றால் ஆமாம். அவர்களுக்கு எந்தவித வெளிகாயங்களும் இல்லை என்றால் நான் அளித்துள்ள விபத்து பதிவேட்டில் திருச்சுழி அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டின் 950, 951ன்படி என குறிப்பிட்டுள்ளேன். எனவே வெளிக்காயம் குறித்து

குறிப்பிடவில்லை. திருச்சுழி அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டுகளை பார்வையிட்டால்தான் மேற்படி நபர்களை எத்தனை பேர் அடித்தார்கள் என்ன காயம் என்று தெரியவரும் என்றால் சரிதான். திருச்சுழி அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டினை நான் கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. ஜெயாவிற்கு தலைவலி, கழுத்து வலி என தெரிவித்தது நடிப்பாக கூட இருக்கலாம் என்றால் இருக்கலாம். லட்சுமிக்கு தலைவலியும், மயக்கமும் என தெரிவித்தது நடிப்பாக கூட இருக்கலாம் என்றால் இருக்கலாம்.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.